செ.வெ.எண்: 48/ஜனவரி நாள் :25.01.2016

# <u>செய்தி வெளியீடு</u>

## தேசிய வாக்காளர் தினம் 2016 முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப.,அவர்கள் துவக்கி வைத்தார்.







தேசிய வாக்காளர் தினம் 2016 முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு பேரணி இன்று (25.01.2016) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ. லோகநாதன்,இ.கா.ப முன்னிலை வகித்தார்.

தேசிய வாக்காளர் தின பேரணி, தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு தின கண்காட்சி வாகனத்தினையும், மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்று பொதுமக்களிடத்தில் வாக்காளர் பட்டியல் தொடர் திருத்தம் 2016 தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்காளர் தின உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். புதியதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் அட்டைகளையும், ஆறாவது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரிகளில் வாக்காளர்களின் ஜனநாயக கடமை என்ற பொருளில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, வினாடி வினா மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி வாக்காளர் பட்டியல் சுருக்கத்தில் சிறப்பாக பணியாற்றிய வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு பரிசுகளை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது :-

தருமபுரி மாவட்டத்தில் ஆறாவது தேசிய வாக்காளர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. வாக்களிப்பது ஜனநாயக கடமையாகும். 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை கட்டாயம் சேர்க்க வேண்டும் மாணவர்கள் தங்களது பெற்றோர் மற்றும் பொதுமக்களிடம் இது குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் கல்விதுறை சிறப்பாக செயல்பட்டு விழிப்புணர்வை அனைவரிடமும் ஏற்படுத்தியுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் போன்றவை மேற்கொள்ள 31.01.2016 மற்றும் 06.02.2016 ஆகிய நாட்களில் 1419 வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் -7, பெயர், வயது, முகவரி திருத்தம் செய்ய படிவம் -8,

ஒரே தொகுதிக்குள் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு மாற்றம் செய்ய படிவம் -8எ பூர்த்தி செய்ய வேண்டும். 01.01.2014-ம் தேதியை தகுதி நாளாக 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வாக்காளராக வேண்டும். பொதுமக்கள் முகாம்களை பயன்படுத்திகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவிகள் பங்கேற்ற வாக்களிப்பதின் அவசியம் குறித்த கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜனநாயகத்தில் வாக்காளர்களின் பங்கு என்ற தலைப்பில் பொன்னேரி புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. தமிழ்மணி அவர்கள் சிறப்புரையாற்றினார். மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி. துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு. டி . ஸ்ரீதர் கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது). திரு. உதயகுமார், தொழிலாளர் நல அலுவலர் திருமதி. கோட்டீஸ்வரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. சுவாமிநாதன், வட்டாட்சியர் திரு. கருப்பசாமி, தேர்தல் வட்டாட்சியர் திருமதி. லதா, மாவட்ட கல்வி அலுவலர் திரு. நடராஜ் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி